**நாள் 11.08.2023.**
**OS 81/2019**
**பி.சா 2 சாட்சி ஆரோக்கிய செல்வி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் வாதி கிரைய ஒப்பந்த வழக்கு போட்டிருக்கிறார். நான் பைனான்சிற்கு வெற்றுதாளில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் அதில் வாதி பொய்யாக கிரைய ஒப்பந்தமாக எழுதி கொண்டார்.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் நான் பைனான்ஸியரிடம் கையெழுத்து போட்டு கொடுத்ததாக சொல்லும் வெற்று பேப்பர். ஒப்பந்தத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால் நான் ஒப்பந்தமே போடவில்லை. ஒப்பந்தத்தை நான் பார்க்கவில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நானும் என் கணவரும் சேர்ந்து தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னோம். சாட்சி வழக்கறிஞர் கேட்ட கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்கவில்லை என்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.